வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු

விலை ரூ. 30/=




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 30.05.2026 சனிக்கிழமை இதழ் : 144 பக்கங்கள் : 08

# மின்சாரம், எரிபொருள் விலைகளில் மாற்றம்!

## நாணய நிதியத்துக்கு ஜனாதிபதி கடிதம்

கொழும்பு, மே. 30

மின்சாரம் மற்றும் எரிபொருளுக்கான செலவுகளை முழுமையாக ஈடு செய்யக்கூடிய விலை நிர்ணய முறையை மீண்டும் நிலைநிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சர்வதேச நாணய நிதியத்துக்கு தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திற்கு அனுப்பியுள்ள உத்தியோகபூர்வ கடிதத்திலேயே ஜனாதிபதி இதனைத் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் விரிவுபடுத்தப்பட்ட நிதி வசதிக்கான ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வுகளை நிறைவு செய்து, அதற்கான அனுமதியை நாணய நிதியத்தின் நிர்வாகச் சபை கடந்த மே 27ஆம் திகதி வழங்கியிருந்தது.

இதற்கமைய, இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிப்பதற்காக 695 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி இலங்கைக்குக் கிடைத்தது.

இதற்கு முன்னதாக, கடந்த மே 13 ஆம் திகதி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோரின் கையொப்பங்களுடன் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டிருந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

சர்வதேச நாணய நிதிய

07

## காணாமற்போன படகுகளில் ஒன்று மூழ்கியது! மீனவர்கள் அதில் சிக்கியிருக்கலாம் என அச்சம்!!




யாழ்ப்பாணம், மே. 30

யாழ். வடமராட்சி கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்று காணாமல்போன தந்தை, மகன் உள்ளிட்ட நான்கு மீனவர்களைத் தேடும் பணிகள் நேற்று

07

## காணாமல்போன மீனவர்களை தேடும் பணிகள் துரித கதியில்!

### அமைச்சர் சந்திரசேகர் பணிப்புரை

யாழ்ப்பாணம், மே. 30

பருத்தித்துறை முனை மற்றும் கற்கோவளம் பகுதிகளிலிருந்து கடற்றொழிலுக்காக கடலுக்கு சென்ற 4 மீனவர்கள் காணாமல் போயுள்ள

07

## காணாமலாக்கப்பட்டோரின் வழக்குகள் மிகவிரைவாக விசாரித்து முடிக்கப்படும்!

### அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



கொழும்பு, மே. 30

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் நிலுவையில் உள்ள 11 ஆயிரம் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை தொடர்கதையாக்க முடியாது. நாடளாவிய ரீதியில் 15 குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த ஆண்டு 5000 முறைப்பாடுகளையும், அடுத்த ஆண்டு 6000 முறைப்பாடுகளையும் நிறைவு செய்வதற்கு

07

## காலத்தை இழுத்தடிக்காமல் ஜனாதிபதி உடனே காணிகளை விடுவிக்கவேண்டும்!

### சிறீதரன் எம்.பி. மயிலிட்டியில் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே. 30

காணி விடுவிப்பு தொடர்பில் காலங்களை இழுத்தடிக்காது மக்களின் நியாமான கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி செவி சாய்த்து உடனடியாக காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என

07



## சிறுவருக்கு எதிரான வன்முறை; கண்டித்து யாழில் போராட்டம்!

யாழ்ப்பாணம், மே. 30

சிறுவர்களுக்கு எதிரா்ன அனைத்து வகையான வன்முறைகளையும் கண்டித்து, “சமூக மாற்றத்திற்கான போராட்ட இயக்கம்” ஏற்பாடு செய்த கவனயீர்ப்பு போராட்டம் நேற்று மாலை யாழ்ப்பாணம்

07



## பஸில் உள்ளிட்டோரை கைது செய்ய கோட்டை நீதவான் நேற்று உத்தரவு!

### வெளிநாட்டு பயணத் தடையும் விதிப்பு

கொழும்பு, மே. 30

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் முன்னாள் தலைவர் பாஷ்வர குணரத்ன மற்றும் அதன் முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர் ரூமி ஜவ்பர் உள்ளிட்டோரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கோட்டை நீதவான் பசன் அமரசேன நேற்று குற்றப்புலனாய்வுத்

07

## மயிலிட்டியில் இருந்து இராணுவத்தை வெளியேற கோரி நேற்று போராட்டம்!

### கறுப்புக் கொடிகள் பறக்கவிட்டு எதிர்ப்பு



கொழும்பு, மே. 30

நாட்டின் பல பகுதிகளிலும் வெசாக் கொண்டாட்ட கொடிகள் பறக்கப்படவிடப்பட்டுள்ள நிலையில் வலிகாமம் வடக்கு மயிலிட்டி பகுதியில் தமது காணிகளில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் எனக் கோரி கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டு காணி உரிமையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வலிகாமம் வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி, காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் “அதிகாரிகள்” பங்களா முன்பாக நேற்று ஆறாவது வெள்ளிக்கிழமை போராட்டத்தை முன்னெடுத்தனர்.

07

## வடக்கு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்துங்கள்!

### ஐக்கிய சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, மே. 30

பல எதிர்பார்ப்புகளைக் கொடுத்து, வட பகுதி மக்களின் பேராதரவை இந்த அரசாங்கம் வென்றுள்ளது. எனவே, அந்த மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில், இந்த அரசாங்கம் உடனடியாக இந்தத் தேர்தலை நடத்தவேண்டும் என ஐக்கிய சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிச் செயலாளர் வழக்கறிஞர் துசித குணசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது

07

## போக்குவரத்து அமைச்சின் செயலாளர் பதவி விலகல்!

கொழும்பு, மே. 30

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா பதவி விலக தீர்மானித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கபில பெரேரா தமது தீர்மானம் குறித்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் விளக்கமளித்துள்ளதாகவும், செயலாளர் பதவியில்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையில் தமிழ் மக்கள் இன அழிப்புக்கு உள்ளாகினர்!

## அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 30

இலங்கையில் தமிழ் மக்கள் மீது இனவழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதென அருட்தந்தை ஜீவந்த பிரிஸ் தெரிவித்துள்ளார். இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிங்கள அரசாங்கங்களால் தமிழ் இனவழிப்பு நடவடிக்கைகள் திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரகலய போராட்டத்தின் முக்கிய முகமான அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், அண்மையில் ஆற்றிய உரை ஒன்றின் காரணமாக கைது செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கைகளும் சமூக வலைத்தளங்களில் விமர்சனங்களும் அதிகரித்து வரும் நிலையில், அது குறித்து அவர் விரிவான விளக்கங்களை வழங்கியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது-

ஊடகவியலாளர் தராகி சிவராம் கொலை தொடங்கி தீபச்செல்வனின் நூல்கள் சுங்கத்திணைக்களத்தில் முடக்கப்பட்டமை வரையில் அனைத்தையுமே இனவழிப்பு நடவடிக்கைகளாக கருதவேண்டும்.

1956ஆம் ஆண்டு தனிச்சிங்கள சட்டத்துக்கெதிராக வடக்கிலிருந்து காலி முகத்திடலில் போராட்டம் நடத்த வந்த தமிழர்கள் கொடூரமாக அடித்து துரத்தப்பட்ட வரலாறும் உண்டு.

திட்டமிட்ட அடிப்படையில் தமிழ் மக்கள் இன ரீதியாக அழிக்கப்படுகின்றனர்.

மே 16ஆம் திகதி நான் ஆற்றிய உரையின் மிகச்சிறிய பகுதியை மட்டும் வெட்டி எடுத்து, நான் ஒட்டுமொத்த சிங்கள மக்களுக்கும் எதிராகப் பேசியது போன்ற ஒரு பிம்பத்தை ஒரு குழுவினர் உருவாக்கி வருகின்றனர்.

உண்மையை எதிர்கொள்ள முடியாதவர்களே இவ்வாறான பதற்றத்தை உருவாக்குகின்றனர். இது எனது குரலை ஒடுக்க எடுக்கப்படும் ஒரு முயற்சி. நான் இனப்படுகொலை என்று குறிப்பிட்டது உணர்ச்சிவசப்பட வேண்டிய விடயம் அல்ல. அது பல சர்வதேச மற்றும் உள்ளூர் ஆவணங்களில் உறுதிப்படுத்தப்பட்ட ஒன்று.

2013 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெற்ற நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தில் சர்வதேச கல்வியியலாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் இலங்கையில் இனப்படுகொலை நடந்ததாக அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

2015 பெப்ரவரி 10 ஆம் திகதி வட மாகாண சபை, 1948 முதல் தமிழ் மக்களுக்கு எதிராக அமைப்பு ரீதியான இனப்படுகொலை நடைபெற்று வருவதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

2022 மே 16 அன்று வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த நான்கு ஆயர்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கையில், தமிழ் மக்கள் இன்றும் ஒரு இனப்படுகொலை போன்ற ஒடுக்குமுறைக்கு உள்ளாகியிருப்பதாக குறிப்பிட்டுள்ளனர்.

இனப்படுகொலை என்பது ஆயிரக்கணக்கானவர்களைக் கொல்வது மட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட இனத்தின் அடையாளத்தை அழிக்க முயற்சிப்பதும், அவர்களை உடல் மற்றும் உளரீதியாக ஒடுக்குவதும் ஆகும்.

இந்த ஒடுக்குமுறைகள் சிங்கள மக்களால் செய்யப்பட்டவை அல்ல, மாறாக 1948 முதல் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் தங்களது அதிகாரத்தைத் தக்கவைக்க சிங்கள தேசியவாதத்தைப் பயன்படுத்திக் கொண்டன.

1956 இல் காலி முகத்திடலில் அஹிம்சை முறையில் போராடிய தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை, 1983 கறுப்பு ஜூலை, யாழ். நூலக எரிப்பு மற்றும் தர்மரத்னம் சிவராம் (தராக்கி) உள்ளிட்டோரின் படுகொலைகள் இந்த நிழல் அரசாங்கத்தின் ஒரு பகுதியே-என்றார். (அ)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கஜேந்திரகுமார் எம்.பி. நேரில் பயணம்!



யாழ்ப்பாணம், மே. 30

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று முன்தினம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு நேரில் சென்று, அங்குள்ள தேவைப்பாடுகள், குறைபாடுகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக விரிவான ஆய்வொன்றை மேற்கொண்டார்.

மருத்துவமனையின் தற்போதைய நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன் மருத்துவமனையின் அதிகாரிகளுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

மருத்துவமனைக்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினரை நிர்வாகத்தினர் வரவேற்றதுடன், பல்வேறு பிரிவுகளுக்கும் அவரை அழைத்துச் சென்று தற்போதைய செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்தனர்.

குறிப்பாக வெளிநோயாளர் பிரிவு, தங்கி சிகிச்சை பெறும் விடுதிகள், அவசர சிகிச்சை பிரிவு பிரசவ விடுதி, விபத்து அவசர சிகிச்சை பிரிவு ஆகியவற்றை அவர் பார்வையிட்டார்.

மருத்துவமனையில் பணியாற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் தாதியர்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் குறித்தும் கேட்டறிந்தார்.

ஆய்வினைத் தொடர்ந்து, மருத்துவமனை நிர்வாக அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன.

மருத்துவமனையின் தற்போதைய கட்டடத் தொகுதித் தேவைகள், விடுதிகளின் கொள்ளளவு பற்றாக்குறை மற்றும் நவீன மருத்துவ உபகரணங்களின் அவசியம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

ஆனால் அவை எல்லாவற்றையும் விட மருத்துவர்கள், தாதிகள் மற்றும் ஏனைய சிற்றூழியர்கள் போன்றோரின் ஆளணி பற்றாக்குறை காரணமாக ஏற்படும் பணிச்சுமை மற்றும் சேவைகளில் ஏற்படும் தாமதங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

தென்மராட்சிப் பகுதி மக்களின் பிரதான மருத்துவத் தேவையைப் பூர்த்தி செய்யும் இந்த ஆதார மருத்துவமனையை, அடுத்த கட்டத்திற்கு தரம் உயர்த்துவதற்குத் தேவையான நீண்டகால அபிவிருத்தி வரைபடம் குறித்து நலன்புரிச் சங்க உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள ஆதார மருத்துவமனைகள் வளப் பங்கீட்டின்போது சாவகச்சேரி ஆதார மருத்துவமனை பின்தங்கி உள்ளது என்பதை குறிப்பிட்டனர். கலந்துரையாடலின் நிறைவில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்-

இங்குள்ள தேவைகள் மற்றும் குறைபாடுகள் அனைத்தையும் அறிக்கையாகத் தொகுத்து எனக்கு சமர்ப்பியுங்கள். அதன் அடிப்படையில், பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வதுடன், உரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாக இதற்கான தீர்வையும் பெற்றுத்தர முழுமையான அழுத்தங்களைப் பிரயோகிப்பேன்-என்றார்.

# சில பகுதிகளில் வெள்ள அபாயம்

වාරිමාර්ග දෙපාර්තමේන්තුව - ශ්‍රී ලංකාව
நீர்ப்பாசன திணைக்களம் - இலங்கை
IRRIGATION DEPARTMENT - SRI LANKA

கொழும்பு, மே. 30

அடுத்த 48 மணித்தியாலங்களுக்குள் குடா கங்கை மற்றும் மகுரு கங்கை ஆகியவற்றின் தாழ்நிலப் பகுதிகளில் சிறியளவிலான வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இதன்படி, புலத்சிங்கள, மதுராவல, மற்றும் பாலிந்தநுவர ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட தாழ்நிலப் பகுதிகளில் வாழும் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் மற்றும் அதன் ஊடாகப் பயணிப்போர் அவசர சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் வகையில் விழிப்புடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# விசேட போக்குவரத்து சேவைகள் ஆரம்பம்



கொழும்பு, மே. 30

வெசாக் தினத்தை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் செல்லும் பொதுமக்களுக்காக விசேட போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெசாக் தினத்தை முன்னிட்டு சித்திரை புத்தாண்டு கால நேர அட்டவணைக்கு அமைவாகவே பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி கொழும்பு கோட்டையிலிருந்து அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த பஸ் சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு உட்பட பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வெசாக் வலயங்களை மையப்படுத்தியும் இந்த விசேட சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இ.போ.ச தலைவர் சஜீவ கனகரத்ன குறிப்பிட்டுள்ளார். (அ)

# 7 மாதங்களில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 189,817 பேர் கைது!

கொழும்பு, மே. 30

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் “முழு நாடுமே ஒன்றாக” என்ற தேசிய செயற்பாட்டிற்கமைய, கடந்த 2025 ஒக்ரோபர் 30ஆம் திகதி முதல் 2026 மே 28ஆம் திகதி வரையில் போதைப்பொருள் சுற்றிவளைப்பின்போது 189,817 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த போதைப்பொருள் சுற்றிவளைப்பின்போது 190,925 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் கைது செய்யப்பட்ட 2,918 சந்தேகநபர்களுக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன், போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள 2,095 பேர் மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# பாடசாலையில் கெட்ட வார்த்தை பேசியதற்கு சிறுவனின் வாயில் சூடு வைத்த தந்தை கைது!

மட்டக்களப்பு, மே. 30

மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ்சேனை பகுதியில் 8 வயதுச் சிறுவனின் வாயில் இரும்புக் கம்பியால் சூடு வைத்த தந்தையை சந்திவெளி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 3ஆம் ஆண்டில் கல்வி கற்று வரும் 8 வயதுச் சிறுவன் பாடசாலை வகுப்பறையில் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி வந்துள்ளார்.

இது தொடர்பாக குறித்த சிறுவனின் பெற்றோரிடம் ஆசிரியர் முறைப்பாடு செய்ததையடுத்து சிறுவனின் தந்தை, மகனின் வாயில் இரும்புக் கம்பியால் சூடு வைத்துள்ளார்.

சிறுவனிடத்தில் அவனது தந்தை நடந்துகொண்ட விதத்தை அறிந்த அப்பகுதி கிராம உத்தியோகத்தர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனை தொடர்ந்து, பொலிஸார் சிறுவனுக்கு சூடு வைத்த தந்தையை கைது செய்ததுடன், பாதிக்கப்பட்ட சிறுவன் வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

மேலதிக விசாரணைகளில் சந்திவெளி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
30.05.2026 சனிக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தமிழ் ஈழத்தைக் காண்பதற்கு சரத் வீரசேகர சொல்லிக் கொடுக்கும் திட்டம்

கல்லெறி உடம்பில் எந்த பகுதியில் பட்டாலும் நாய் பின்னங் காலைத் தான் தூக்கிக்கொண்டு ஓடும். அது போன்றே தென்னிலங்கை இனவாதிகளும் தாங்கள் எதிர் நோக்குகின்ற நெருக்கடிகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்கு தமிழர்களைச் சம்பந்தப்படுத்தி "மனப்பிறழ்வான" முறையில் இனவாதத்தைப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

அநுராதபுரம் அட்டமஸ்தானாதிபதி பல்லேகம ஹேமரத்ன தேரர் சிறுமி ஒருத்தியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சர்ச்சையில் பெரும்பான்மைச் சமூகத்தின் விவேகத்தை நிந்தனை செய்யும் வகையிலான கருத்துக்களை இனவாதிகள் முன்வைக்கிறார்கள்.

அட்டமஸ்தானாதிபதி விவகாரத்தை பூதாகாரமாக்கி இலங்கையில் புத்த சாசனத்தை அழிப்பதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் முயற்சிக்கின்றன என்று முன்னாள் கடற்படைத் தளபதியும் அமைச்சருமான சரத் வீரசேகர தெரிவித்திருக்கிறார்.


புத்தசாசனத்தை அழித்தால் சிங்களத் தேசியம் இல்லாமல் போகும். அதன் பின்னர் ஈழத்தை உருவாக்கலாம் என்பதே புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் நோக்கம் என்று அவர் கூறியிருக்கிறார்.

தமிழ் ஈழத்தை இனிமேல் காண்பதானால் சிங்களத் தேசியத்தை அழிக்க வேண்டும் சிங்களத் தேசியத்தை அழிக்க வேண்டுமானால், புத்த சாசனத்தை அழிக்க வேண்டும். புத்தசாசனத்தை அழிக்க வேண்டுமானால், பௌத்த மகாசங்கத்தை களங்கப்படுத்த வேண்டும் அவ்வாறு களங்கப்படுத்த வேண்டுமானால், பௌத்த துறவிகளை முறைகேடான செயல்களில் ஈடுபட வைக்கவேண்டும் - வீரசேகர கூறியிருக்கும் கருத்துக்களை குறிப்பால் உணர்த்துவதாக இருந்தால் இதுவே புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் இன்றைய திட்டமாக இருக்க வேண்டும்.

அந்த திட்டத்தின் முதல் கட்டம் மகாசங்கத்தின் உயர் அடுக்கைச் சேர்ந்த ஒரு பிக்குவை விஸ்வாமித்திரரின் நிலைக்கு உள்ளாக்க வேண்டும் அதற்கு அந்த பிக்குவுக்கு ஆசைகாட்டி மோசம் செய்ய ஒரு வறிய குடும்பத்தைச் சேர்ந்த இளம் தாயும் அவளின் மகளையும் பயன்படுத்த வேண்டும் அவர்கள் இருவரும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் கைப்பொம்மைகளாகச் செயற்படக்கூடியவர்களாக வேண்டும் - வீரசேகரவின் கற்பனையைக் கட்டவிழ்க்கப்போனால் இவ்வாறாக எல்லாம் யோசிக்க வேண்டியிருக்கிறது. தமிழ் ஈழத்தைக் காண்பதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு இவ்வாறு ஒரு யோசனை இருந்ததோ இல்லையோ வீரசேகர " நல்ல யோசனை" சொல்லிக் கொடுக்கிறார்.

அவருடன் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தொடர்புகொண்டால் மேலும் பல “புத்தாக்கமான” திட்டங்களை அவர் சொல்லிக் கொடுக்கவும் கூடும். புத்த சாசனத்தை அழிக்க வேறு எவரும் தேவையில்லை.

# ஒரு தேசத்தின் அவமானம்



நியாயமான சந்தேகம் இருக்கும் பட்சத்தில் பொலிசார் அந்தத் துறவியைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என்றும் அதிகாரசபை பிரதிப் பொலிஸ் மா அதிபருக்குத் தெரிவிக்கிறது.

*ஏப்ரல் 27:* காவல்துறையினர் இச்சம்பவம் குறித்து நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கின்றனர், ஆனால் அதில் சந்தேக நபர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் தவிர்க்கின்றனர்.

*ஏப்ரல் 30:* முதற்கண் சாட்சியங்கள் (prima facie case) இருந்தபோதிலும் துறவி ஏன் இன்னும் கைது செய்யப்படவில்லை என்று வினவி, பொலிஸ் மா அதிபருக்கு பிரதியொன்றுடன், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மெதவத்தவிற்கு அதிகார சபை கடிதம் எழுதுகிறது.

*மே 4:* காவல்துறையினர் சிறுமி எக்ஸின் தாயாரை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்துகின்றனர். அப்போதும் துறவி சந்தேக நபராக பெயரிடப்படவில்லை.

*மே 8:* அதிகாரசபை தாக்கல் செய்த மனுவின் தொடர்ச்சியாக, துறவியைக் கைது செய்ய நீதிமன்றம் உத்தரவிடுகிறது. அன்றிரவே அவர் நவலோக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார்.

*மே 9:* பொலிசார் துறவியைக் கைது செய்கின்றனர், ஆனால் மருத்துவ ஆலோசனைகளின்படி அவர் நவலோக மருத்துவமனையிலேயே தங்கியிருக்கிறார்.

*மே 13:* கோட்டை நீதிவான் நீதிமன்றம் துறவியை மே 22 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடுகிறது.

*மே 15:* இறுதியாக அந்தத் துறவி தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்படுகிறார்.

*மே 22:* துறவி அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்படுகிறார்.

துறவியின் உடல்நிலை குறித்த முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தேசிய மருத்துவமனையின் பிரதிப் பொது இயக்குநரிடம் அதிகார சபை கேட்டதாகக் கூறப்படுகிறது. அதன்பேரில், பிரதிப் பொது பணிப்பாளர் ஆறு மருத்துவர்கள் அடங்கிய குழுவொன்றை நியமித்தார். அந்தத் துறவி நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும், அவர் எதிர்கொள்ளும் சிறிய அளவிலான உபாதைகள் அவரது வயதிற்கு இயல்பானவை என்றும் அக்குழு முடிவு செய்தது.

சட்ட மருத்துவ அதிகாரி பேராசிரியர் கிளிஃபோர்ட் பெரேராவும் அவரது மருத்துவ ஆவணங்களை ஆய்வு செய்த பின்னர் இதேபோன்ற ஒரு முடிவுக்கே வந்தார்.

சிறுமி. எக்ஸும் அவளது தாயாரும் தனித் தனியாக அளித்த வாக்குமூலங்கள் ஒன்றுக்கொன்று ஒத்துப்போவதாகக் கூறப்படுகிறது. சம்பவ இடத்தை நேரில் பரிசோதித்தபோது, துறவியின் வசிப்பிடம் குறித்து சிறுமி எக்ஸ் அளித்த விவரிப்புகள் துல்லியமானவை என நிரூபிக்கப்பட்டது. மேலும், துறவிக்கும் சிறுமி எக்ஸுக்கும் இடையே 80-க்கும் மேற்பட்ட தொலைபேசி அழைப்புகள் பரிமாறப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் ஒரு சாமானியராகவோ அல்லது குறைந்த சமூக மற்றும் பொருளாதார பலம் கொண்ட ஒரு துறவியாகவோ இருந்திருந்தால், ஒட்டுமொத்த பொலிஸும் இவ்வளவு காலம் தாமதித்து மந்தமாகச் செயல்பட்டிருக்குமா? பொலிசாரும் அதிகாரசபயும் கோரிக்கை விடுத்த போதிலும், மே 22 அன்று அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு சட்டமா அதிபர் திணைக்களம் ஏன் அதன் ஒரு பிரதிநிதியைக் கூட அனுப்பவில்லை?

ஊடக அறிக்கைகளின்படி, குழந்தை வைக்கப்பட்டிருக்கும் மருத்துவமனைக்கு அந்தத் துறவி தொலைபேசி மூலம் அழைத்து, அங்குள்ள ஊழியர்களிடம் எதையும் பேச வேண்டாம் என்று அழுத்தம் கொடுக்க முயன்றதாகத் தெரிகிறது. குழந்தையின் இருப்பிடம் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும் பட்சத்தில், துறவிக்கு அது எப்படித் தெரிந்தது? இந்த கவலைக்குரிய நிகழ்வுப் போக்குகள் அனைத்தையும் பார்க்கும்போது, இந்த வழக்கின் முடிவில் என்ன கிடைக்கும் - நீதியா அல்லது தேசிய மக்கள் சக்தி ஒழிப்பதாக உறுதியளித்த அதே மோசமான தண்டனையிலிருந்து தப்பும் தன்மையா (impunity)?

### புத்தரின் முன்மாதிரியை மறத்தல்

புத்தரால் உருவாக்கப்பட்ட முதல் விநய விதி “சுதின்ன” என்ற துறவி தொடர்பானது. செல்வந் தம்பதியரின் ஒரே மகனான சுதின்ன, இல்லற வாழ்க்கையை வெறுத்து துறவியானார். அவரை மீண்டும் இல்லற வாழ்க்கைக்குத் திருப்பத் தவறிய அவரது பெற்றோர், தங்களது பெரும் சொத்துக்கு ஒரு வாரிசை உருவாக்குவதற்காக, அவரது முன்னாள் மனைவியுடன் உடலுறவு கொள்ளுமாறு அவரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். அதற்கு துறவி சுதின்னாவும் சம்மதித்தார்.

இந்தக் கதையைக் கேள்விப்பட்ட புத்தர், (நம்முடைய மகாநாயக்க தேரர்களைப் போல) மௌனமாக இருக்கவில்லை அல்லது சாசனத்தின் நலனுக்காக (நம்முடைய அரசாங்கம், எதிர்க்கட்சி மற்றும் பாரம்பரிய ஊடகங்களைப் போல) விடயங்களை மூடிமறைக்க முயலவில்லை. அதற்குப் பதிலாக, அவர் துறவி சுதின்னாவை அழைத்து, உண்மையைக் கண்டறிந்து, பின்னர் கூறினார். “அறிவற்றவனே, இது உகந்தது அல்ல, இது முறையானது அல்ல, இது ஒரு துறவிக்கு தகுதியானது அல்ல, இது அனுமதிக்கப்படக் கூடியது அல்ல, இது செய்யக் கூடாதது... அறிவற்றவனே, நீ உண்மைப் போதனைக்கு எதிரானதைச் செய்திருக்கிறாய்... பல தீய செயல்களை முதலில் செய்த முன்னோடியாக நீ இருக்கிறாய். இது மக்களின் நம்பிக்கையைப் பாதிக்கும், சிலரது நம்பிக்கையை இழக்கச் செய்யும்”.

பின்னர் புத்தர் துறவிகள் உடலுறவு கொள்வதற்கு எதிரான விநய விதியை விதித்தார்: “சங்கத்தின் நல்வாழ்வுக்காக, சங்கத்தின் வசதிக்காக, கெட்ட மனிதர்களைக் கட்டுப்படுத்துவதற்காக, நல்ல துறவிகளின் நிம்மதிக்காக, தற்போதைய வாழ்க்கை தொடர்பான ஊழல்களைக் கட்டுப்படுத்துவதற்காக... நம்பிக்கை இல்லாதவர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக, நம்பிக்கை உள்ளவர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதற்காக, உண்மைப் போதனையின் நீண்ட ஆயுளுக்காக...”

துறவி சுதின்ன இல்லற வாழ்க்கையில் தனது மனைவியாக இருந்த ஒரு வயது வந்த பெண்ணுடன் பரஸ்பர சம்மதத்துடன் ஒரே ஒருமுறை உடலுறவு கொண்டார். ஆனால் பல்லேகம ஹேமரதன தேரர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அதைவிட மிகவும் கொடூரமானது - ஒரு குழந்தையைக் கடத்திச் சென்று பாலியல் வன்புணர்வு செய்ததாகும். சுமத்தப்பட்டுள்ள குற்றத்தின் பாரதூரமான தன்மையைக் கருத்தில் கொண்டு, மகாநாயக்க தேரர்கள் இந்த வழக்கு முடியும் வரை, சந்தேக நபரான துறவியை அவர் தற்போது வகிக்கும் மிக உயர்ந்த பதவியிலிருந்து நீக்கியிருக்க வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக, குற்றம் சாட்டப்பட்ட இந்தச் சம்பவம் ஸ்ரீ மகா போதிக்கு மிக அருகிலேயே நடந்துள்ள போதிலும், இந்த வழக்கு குறித்த தங்களது நிலைப்பாட்டை விளக்கி அவர்கள் இதுவரை எந்தவொரு அறிக்கையும் வெளியிடவில்லை. துறவிகள் உடலுறவில் ஈடுபடுவது “உண்மைப் போதனைக்கு எதிரானது”, “தீமையானது” மற்றும் “மக்களின் நம்பிக்கையைப் பாதிக்கும், சிலரது நம்பிக்கையை இழக்கச் செய்யும்” என்ற புத்தரின் வார்த்தைகளை அவர்கள் தெளிவாக மறந்துவிட்டனர். புத்தரின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதன் மூலமும், இந்த கொடூரமான குற்றத்திற்கு உடந்தையாக இருப்பது போல் தோன்றுவதன் மூலமும், அவர்கள் சாசனத்தைப் பாதுகாப்பதற்குப் பங்களிக்கவில்லை, மாறாக அதன் வீழ்ச்சிக்கே வழிவகுக்கிறார்கள்.

ஒரு வகையில் மகாநாயக்க தேரர்களின் மௌனம் பொருத்தமானதுதான், ஏனெனில் இன்று இலங்கையில் இருப்பது புத்தரின் சாசனம் அல்ல. இது புத்தரின் போதனைகளை முற்றிலுமாக மீறி, பௌத்தத்தைப் பாதுகாப்பதற்காக இலட்சக் கணக்கானோரைக் கொல்வதை நியாயப்படுத்திய துறவி மகாநாமவின் சாசனம் ஆகும் (மன்னன் துடுகெமுனுவின் மனசாட்சி குறித்த அவரது முற்றிலும் கற்பனையான கதையில் இது கூறப்பட்டுள்ளது).

இது புத்தரின் போதனைகளை முற்றிலுமாக மீறி, துறவறத்தில் சாதி முறையை அறிமுகப்படுத்திய கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனின் சாசனம் ஆகும். இப்போது இது, சம்மதமற்ற மற்றும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட துறவிகளின் பாலியல் செயல்கள் அனுமதிக்கப்படும் பல்லேகம ஹேமரதனவின் சாசனமாகவும் மாறிவிடுமா? ●

- திசரானி குணசேகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
சவாலாக தெரிந்த சில வேலைகள் சாதாரணமாக முடியும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிட்டும். உத்தியோகத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும்.

**மிதுனம்**
பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் வரும். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**சிம்மம்**
உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**கன்னி**
இதுவரை இருந்த காரியத்தடைகள் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள் மதிப்பார்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். மகிழ்ச்சியான நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**விருட்சிகம்**
சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். உத்தியோகத்தில் மற்றவர்களை விமர்சிக்க வேண்டாம். பொறுமைத் தேவைப்படும்.

**தனுசு**
வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். இனிமையான நாள்.

**மகரம்**
பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் நிர்வாகத்திறமை வெளிப்படும்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய மாற்றம் ஏற்படும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். வியாபாரத்தில் வேலையாட்களால் விரயம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.


# போதைக்கு எதிரான கவனயீர்ப்பும் விழிப்புணர்வும் நேற்று சங்கானையில்!

யாழ்ப்பாணம், மே. 30

போதைப்பொருள் மற்றும் புகையிலைக்கு எதிரான கவனயீர்ப்பு போராட்டமும், விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் நேற்று சங்கானையில் இடம்பெற்றது.

ஆரம்பத்தில், போதை மற்றும் புகையிலை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக துண்டுப் பிரசுரங்கள் சங்கானை சந்தை - வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து சங்கானை பஸ் நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது போதை மற்றும் புகையிலைக்கு எதிரான பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து விழிப்புணர்வு கருத்துப் பகிர்வு இடம்பெற்றது.



வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் சங்கானை பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர், சமூக மட்ட அமைப்பினர், வர்த்தகர்கள் மற்றும் போதைக்கு எதிரானோர் கலந்துகொண்டனர். (அ-05)

## 'பத்திரிகைத்துறையில் என் கதை' தனபாலசிங்கத்தின் நூல் அறிமுகம்!

வடமராட்சி, மே. 30

வீரகத்தி தனபாலசிங்கத்தின் 'பத்திரிகைத்துறையில் என் கதை' நூல் அறிமுக நிகழ்வு கரவை மாணிக்கவாசகர் வித்தியாலய பிரதான மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகபேராசிரியர் கு. மிகுந்தன் கலந்த கொள்ளவுள்ளார்.

வரவேற்புரையை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி உப அதிபர் ந. பிரதீபன் நிகழ்த்தவுள்ளார்.

நூல் அறிமுகவுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் நிகழ்த்தவுள்ளார்.

கருத்துரைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்தியநிபுணர் சி. சிவதாஸ், கரவெட்டி திரு இருதயக் கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் இ. இராகவன், பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் ந. தெய்வேந்திரராஜா, சமுர்த்தி முகாமையாளர் ச. இராகவன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-02)

## யாழ்- கதிர்காம பாதயாத்திரீகர்கள் முள்ளிவாய்க்காலை சென்றடைவர்!

முல்லைத்தீவு, மே. 30

வரலாற்று பிரசித்தி பெற்ற இலங்கையின் மிக நீண்ட யாழ்ப்பாணம் - கதிர்காமம் பாத யாத்திரை எட்டாம் நாளான இன்று சனிக்கிழமை முல்லைத் தீவு முள்ளிவாய்க்காலை அடைகின்றது.



நாளை ஒன்பதாம் நாள் ஞாயிற்றுக்கிழமை வரலாற்று பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தைச் சென்றடைகின்றது.

அங்கு குளிர்த்திச்சடங்கு பார்க்க ஒருநாள் தங்கியிருந்து ஓய்வெடுப்பர்.

ஜெயா வேல்சாமி தலைமையிலான 121 பேர் கொண்ட இந்த பாதயாத்திரை கடந்த 23 ஆம் திகதி சந்நிதியிலிருந்து புறப்பட்டது.

மேலும், வற்றாப்பளையில் 52 அடியார்கள் இந்த யாத்திரை குழுவில் இணைந்து கொள்ள இருப்பதாக ஜெயாவேல்சாமி தெரிவித்தார்.

## வரணியில் சேக்கிழார் சுவாமிகள் விழா

யாழ்ப்பாணம், மே. 30

தென்மராட்சி - வரணித் தமிழ்ச்சங்கமும் சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப்பாடசாலையும் இணைந்து நடத்திய சேக்கிழார் சுவாமிகள் விழா நேற்று முன் தினம் சிறப்புற நடைபெற்றது.

வரணியூர் சைவப்புலவரும் வரணித் தமிழ்ச்சங்கத்தின் தலைவருமான கா.கமலநாதன் தலைமையில் நேற்று முன் தினம் பிற்பகல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையைத் தொடர்ந்து, சேக்கிழார் சுவாமிகள் மற்றும் 63 நாயன்மார்களின் திருவுருவப் படங்கள் வரணியில் அமைந்துள்ள தென்மராட்சி கலாசார மத்திய நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டு எழுந்தருளச் செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் திருமுன்னிலையாக சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய பிரதம குரு சிவசிறி இ. குமாரசுவாமிக்குருக்கள் கலந்து கொண்டு பூசை வழிபாடுகளை நடத்தினர்.

மேலும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் மற்றும் வரணி மத்திய கல்லூரி அதிபர் இ. கோகுலராகவன் ஆகியோரும் விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

## நயினாதீவு அதிபர் உயிரிழப்பு; படகோட்டி விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், மே. 30

படகில் பயணிக்கும்போது கடலில் தவறி விழுந்து நயினாதீவு அதிபர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைதான படகோட்டியை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நயினாதீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை படகில் பயணித்துக்கொண்டிருந்தவேளை கடற் சீற்றம் காரணமாக படகில் இருந்து கடலினுள் தவறி விழுந்து நயினாதீவு சிறீ கணேச கனிஷ்ட மகாவித்தியால அதிபரான நடராசா மயூரன் (வயது-48) என்பவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஊர்காவற்துறை பொலிஸார் படகோட்டியை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர், ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்தியபோது, படகோட்டியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அந்நியச் செலாவணி நெருக்கடி மீண்டும் ஏற்பட வாய்ப்பில்லை!

## பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க

கொழும்பு, மே. 30

நாட்டின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட வேகமாக வலுவடைந்து வருவதால் மீண்டும் ஒரு அந்நியச் செலாவணி நெருக்கடி ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை. 2023ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின்போது கணிக்கப்பட்ட பொருளாதார முன்னறிவிப்புகளை விட தற்போதைய நிலை மிகவும் சாதகமாக இருக்கிறது என்று கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நடைபெற்ற விசேட கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்-

கடந்த காலங்களில் 3.1 வீதமாக கணிக்கப்பட்டிருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி, தற்போது 5 வீதத்தை எட்டியுள்ளது. அதேபோல் 15 வீதமாகக் கணிக்கப்பட்ட ஏற்றுமதிப் பங்களிப்பு தற்போது 17.5 வீதமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக இந்த ஆண்டில் ஏற்றுமதி வருமானம் 18.2 பில்லியன் டொலராக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த காலத்தில் எதிர்மறையாக காணப்பட்ட நடைமுறைக்கணக்கு தற்போது நேர்மறையான நிலைக்கு மாறியுள்ளது-என்றார். (அ)

# வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு

கொழும்பு, மே. 30

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எவ். யூ. வுட்லர் தெரிவித்துள்ளார்.

வெசாக் வாரத்தில் கலாசாரத்திற்குப் பொருத்தமற்ற வகையில் நடந்துகொள்ளும் நபர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

இலங்கை பொலிஸார் நாட்டின் 25 நிர்வாக மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் விசேட பாதுகாப்புத் திட்டம் ஒன்றையும், அதேபோன்று போக்குவரத்துத் திட்டம் ஒன்றையும் தற்போது தயார் செய்துள்ளனர்.

இந்த முறையும் நாம் முக்கியமாகப் பொதுமக்களுக்கு நினைவூட்டுகிறோம், ஒவ்வொரு வழிபாட்டுத் தலங்களிலும், குறிப்பாகத் தன்சல்கள் மற்றும் வெசாக் வலயங்களை மையப்படுத்தி சிவில் உடையில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களும், புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களும் உங்களின் பாதுகாப்பிற்காக இருப்பார்கள்.

அதேபோன்று, அலட்சியமாகவும் அபாயகரமாகவும் மற்றும் மற்றவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் இயக்கப்படும் ஏதேனும் வாகனம், மோட்டார் சைக்கிள் அல்லது முச்சக்கர வண்டி தொடர்பாக 070-4755600 என்ற வாட்ஸ்அப் இலக்கத்திற்கோ அல்லது 119, 188 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என அவர் கூறினார். (அ)

# வெளிநாடுகளில் ஒளிந்துள்ள 89 குற்றவாளிகளை நாட்டுக்குக் கொண்டு வர பொலிஸ் நடவடிக்கை!

கொழும்பு, மே. 30

இலங்கையில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டு, வெளிநாடுகளுக்குத் தப்பியோடி தலைமறைவாக இருக்கும் மற்றும் சர்வதேச சிவப்பு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ள 89 குற்றவாளிகளை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், எவ்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் தலைமறைவாக இருந்த 8 குற்றவாளிகள் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் விபரிக்கையில், கடந்த 22 ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து 19 ஆண் சந்தேகநபர்கள் மற்றும் இரண்டு பெண் சந்தேகநபர்கள் உட்பட 21 பேர் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டனர்.

அவர்கள் தற்போது சிறப்புப் பிரிவுகளின் கீழ் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். அதனைத் தொடர்ந்து, நேற்று முன் தினம் இரவும் ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து மேலும் 8 சந்தேக நபர்களை நாட்டுக்கு அழைத்து வர முடிந்துள்ளது.

இந்த 8 பேரும் ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாய் மற்றும் ஷார்ஜா ஆகிய பகுதிகளில் பல்வேறு குற்றங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களாவர். உளவுத்துறை நடவடிக்கையின் மூலமே இவர்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

அழைத்து வரப்பட்ட 8 சந்தேகநபர்களில் மூன்று பேர் திட்டமிட்ட குற்ற கும்பல்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணி, அங்கிருந்தவாறே இலங்கையில் குற்றங்களை வழிநடத்திய குழுவைச் சேர்ந்தவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இரண்டு பேர் பெருமளவிலான போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்களாவர்.

ஏனைய மூன்று பேர் நாட்டில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் குற்றங்களைச் செய்துவிட்டு, பல்வேறு நாடுகளுக்குத் தப்பியோடி, நீதிமன்றத்தில் இருந்து தலைமறைவாகி, அங்கிருந்தபடி குற்றங்களை வழிநடத்தும் எவருக்கும் நாங்கள் இடமளிக்கப் போவதில்லை என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறோம்-என்றார். (அ)

# மகாநாயக்கர்களின் முடிவுகளை கேள்விக்கு உட்படுத்த முடியாது!

## கூறுகிறார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, மே. 30

மகாநாயக்க தேரர்கள் கூறும் கருத்துக்களையும் எடுக்கும் முடிவுகளையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அது சரியா தவறா என்பது நமக்குரிய பிரச்னை அல்ல என்பதால் அதனை நம்மால் கேள்விக்குட்படுத்த முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

கொழும்பு, கொஹுவல வுட்லண்ட் மாவத்தையில் அமைந்துள்ள சிறி சுமனாராம விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட "தாது மந்திர்" திறப்பு விழா நேற்று முன் தினம் மாலை பக்திபூர்வமாக நடைபெற்றது.

அமரபுர தர்ம ரக்ஷித மகா நிக்காயவின் அநுநாயக்கர், சாஸ்திரபதி வணக்கத்திற்குரிய வதகெதர விமல புத்தி அநுநாயக்க தேரரால் இந்த புதிய தாது மந்திர் திறந்து வைக்கப்பட்டது.

இந்த உன்னத புண்ணிய உற்சவத்தில் மகா சங்கத்தினர் மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டதுடன், அப்பிரதேசத்தைச் சேர்ந்த பெருந்திரளான பௌத்த மக்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு வழிபாடுகளில் ஈடுபட்டனர்.



இந்நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த-

மகாநாயக்க தேரர்கள் கூறும் கருத்துக்களையும் எடுக்கும் முடிவுகளையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அது சரியா தவறா என்பது நமக்குரிய பிரச்னை அல்ல என்பதால் அதனை நம்மால் கேள்விக்குட்படுத்த முடியாது.

அத்துடன், மகாநாயக்க தேரர்கள் ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தால் நாம் அதற்கு இணங்கி, தலைவணங்கிச் செயல்பட வேண்டும்-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டு. தீ விபத்தில் உயிரிழந்த சிறுவர்களை யாசகம் பெறவே அழைத்து வந்தார் தந்தை!

## பொலிஸாரின் விசாரணையில் தகவல்

மட்டக்களப்பு, மே. 30

மட்டக்களப்பில் விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில், சகோதரர்களான இரு சிறுவர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை அடுத்து சிறுவர்களின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது மனைவிக்கு புற்று நோய் எனவும் , அவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் கூறி மட்டக்களப்பில் உள்ள தனியார் தங்குமிட விடுதியில் அறை ஒன்றினை வாடகைக்கு பெற்று 5 வயது பெண் பிள்ளை மற்றும் 3 வயது ஆண் பிள்ளை ஆகிய இரு பிள்ளைகளுடன் தந்தை தங்கியிருந்துள்ளார்.

இதன்போது, பிள்ளைகள் இருவரையும் அறையில் வைத்து பூட்டி விட்டு, தந்தை மது அருந்தச் சென்ற சமயம் அறையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி இரு பிள்ளைகளும் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தவேளை, தந்தையின் அடையாள அட்டையில் சந்தேகம் ஏற்பட்டு அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த அடையாள அட்டையானது கடந்த 2023ஆம் ஆண்டு காலப் பகுதியில் பதுளையைச் சேர்ந்த நபர் ஒருவரால் தவறவிடப்பட்டது என்பதனை பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

அதனை தொடர்ந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தவேளை, சிறுவர்களின் தந்தை அக்குரஸ்ஸ பகுதியைச் சேர்ந்தவர் எனவும், அவரது மனைவி எந்த நோயும் இல்லாமல் மாத்தறையில் வசித்து வருவதனையும் பொலிஸார் அறிந்துள்ளனர்.

அத்துடன், அவர் தனது மனைவிக்கு புற்றுநோய் எனப் பொய் கூறி பிள்ளைகளை வைத்து யாசகம் பெற்று வந்ததனையும், அவருக்கு எதிராக அத்துருகிரிய, சப்புகஸ்கந்த, அநுராதபுரம், கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் உள்ளதுடன், பிடியாணை ஒன்றும் காணப்படுவதனையும் பொலிஸார் கண்டறிந்தனர்.

இந்நிலையில் கைதான நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# காரைதீவில் ஊர்சுற்று காவியம் பாடும் இரவு நேரச் சடங்கு களை கட்டுகின்றது!



காரைதீவு, மே. 30

காரைதீவு கண்ணகி அம்மன் ஆலய வைகாசி திருக்குளிர்ச்சி திருச்சடங்கின் முதலாம் நாள் ஊர்சுற்றுக்காவியம் பாடும் நிகழ்வு இரவில் பக்தி பூர்வமாக நடைபெற்று வருகிறது.

உடுகு அடித்து குறித்த இசையோடு பாடும் இப் பாடலை செவிமடுக்க சுமார் ஆயிரம் பக்தர்கள் இரவில் ஒன்று கூடுவது வழக்கம்.

தொடர்ந்து ஏழு நாள்கள் சடங்கு நடைபெற்று ஜூன் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் சடங்கு நிறைவடையும்.

சடங்குகள் அனைத்தும் ஆலய கப்புகனார் தலைமையில் நடைபெறும். சடங்குநாட்களில் ஊர் சுற்றுக்காவியம் பாடுதலுடன் பச்சைகட்டல் நிகழ்வும் இடம் பெறும்.

ஜூன் 01ஆம் திகதி திங்கட்கிழமை காலையில் மடிப்பிச்சை எடுக்கும் நிகழ்வும் பி.ப.3 மணிக்கு பொங்கலுக்கு நெற்குத்தும் வைபவமும் நடைபெறும்.

(அ)

# ஊடகத்துறை சேவைகள் உள்ளிட்டவை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

கொழும்பு, மே. 30

இலங்கையில் தற்சமயம் அமலில் உள்ள அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் பொதுப் பாதுகாப்பு, அமைதி மற்றும் புயலுக்குப் பிந்தைய அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, பொதுமக்களின் அன்றாட ஜீவனோபாயத்திற்குத் தேவையான அத்தியாவசிய விநியோகங்கள் மற்றும் சேவைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி என்.எஸ். குமாநாயக்கவின் கையொப்பத்துடன், 2026 மே 28ஆம் திகதியிடப்பட்டு இந்த வர்த்தமானி வெளியாகியுள்ளது.

இதன்படி, அரசமைப்பு மற்றும் பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்களின் பிரகாரம், 15 முக்கிய சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகள், பெற்றோலிய பொருள்கள் மற்றும் எரிவாயு உள்ளிட்ட எரிபொருள் விநியோகம், வைத்தியசாலைகள், பராமரிப்பு நிலையங்கள் மற்றும் மருந்தகங்களின் நோயாளி பராமரிப்புச் சேவைகள், பயணிகள் மற்றும் பொருள்களுக்கான பொதுப் போக்குவரத்துச் சேவைகள், வீதிகள், பாலங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் ரயில் பாதைகளைப் பேணுதல், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சேவைகள், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வழங்குதல், பாதுகாத்தல் மற்றும் விநியோகித்தல், தொலைபேசி, தொலைத்தொடர்பு மற்றும் ஊடகத் துறை சார்ந்த சேவைகள் உள்ளிட்டவை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (அ)

# இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளரை விசாரணை செய்க!

## எதிர்க்கட்சியினர் முறைப்பாடு

கொழும்பு, மே. 30

இலஞ்ச, ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்கவின் நடத்தை கோல முறைகேடுகள் குறித்து பல்வேறு முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில் அது தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்குமாறும் ரங்க திஸாநாயக்கவை தற்காலிகமாக கட்டாய விடுமுறையில் அனுப்புமாறும், விசாரணை அறிக்கைக்கமைய உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தி ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினர் இலஞ்ச, ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி டபிள்யூ.எம்.என்.பி. இத்தவெலவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

அந்த முறைப்பாட்டு கடிதத்தில்,

இலஞ்ச, ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றும் ரங்க திஸாநாயக்கவின் செயற்பாடுகள் குறித்து சிக்கல் நிலை உருவாகியுள்ளது. அவர் பக்கச்சார்பாக கடமைகளை முன்னெடுப்பதாக பல்வேறு முறைப்பாடுகள் சமுகமயமாகியுள்ளன. இந்த முறைப்பாடுகளின் உண்மைத் தன்மைகளை நாங்கள் அறியோம். ஆயினும் அந்த முறைப்பாடுகள் குறித்து தேடிப்பார்ப்பது உங்களின் ஆணைக்குழுவுக்குரிய கட்டாய உரிமையாகும்.

பணிப்பாளர் நாயகம் உங்கள் ஆணைக்குழுவில் கடமையாற்றும் இன்னுமொரு அதிகாரியொருவர் மாத்திரமே. ஆணைக்குழு வழங்கும் உத்தரவு மற்றும் செயற்பாட்டு விதிகளின் அடிப்படையில் செயற்பட வேண்டும் என்பதுடன் அவர் ஒழுக்காற்று அதிகாரியென்றாலும் நீங்கள் ஆணைக்குழுவின் தலைமை. அதற்கமைய, ஏதாவதொரு முறைகேடு தொடர்பில் அவருக்கெதிராக ஒழுக்காற்று விசாரணை முன்னெடுப்பதற்கும் ஒழுக்காற்று விசாரணையினூடாக வழங்கப்படும் தீர்ப்புகளுக்கமைய நடவடிக்கை எடுப்பதும் ஆணைக்குழுவுக்குள்ள அதிகாரமாகும்.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 19 (2) (ஏ) மற்றும் (இ) உறுப்புரைகளின் பிரகாரம் ஆணையாளர் நாயகம் ஏதாவதொரு பாரதூரமான முறைகேடு அல்லது சட்டத்தில் அவருக்கு வழங்கப்பட்டுள்ள கடப்பாட்டை செயற்படுத்துவதற்கு தவறினால் தொடர்ந்தும் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்ற முடியாது.

அதற்கமைய, பணிப்பாளர் நாயகத்தினால் முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் உயிரிழந்த கபில சந்திரசேன என்பவரினால் முன்வைக்கப்பட்டிருந்த உறுதிப்படுத்தல்கள் தொடர்பில் எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

கபில சந்திரசேன உயிருடன் இருந்தபோது அவரினால் நீதிமன்றத்துக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த சத்தியக்கடதாசிக்கமைய, அவர் வாக்குமூலமொன்று வழங்குவதற்காக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு சென்றிருந்தபோது பணிப்பாளர் நாயகமான ரங்க திஸாநாயக்க உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் விதத்தில் அவரை விளித்து, வாக்குமூலம் வழங்கும்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பெயர் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருப்பதாக கூறுமாறு அச்சுறுத்தல் விடுத்ததாகவும் இதற்கு முன்னர் கெஹலிய ரம்புக்வெலவின் வழக்கு தொடர்பில் வாக்குமூலம் வழங்க வந்த ஒருவருக்கு தான் வாய்ப்பொன்றை வழங்கியதாக தெரிவித்து அவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த சத்தியக்கடதாசியிலுள்ள விடயங்கள் உண்மையென்றால் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தொடர்பில் பாரதூரமான சந்தேகம் மற்றும் உறுதிபாடற்ற தன்மை மக்கள் மத்தியில் ஏற்படும் என்பது உறுதி. அதேபோல் ரங்க திசாநாயக்கவின் நடத்தைக் கோலம் மிகவும் முறைகேடானது என்பது தெளிவாக தெரிகிறது.

இந்த சத்தியக்கடதாசியிலுள்ள சரி, தவறு எங்களுக்கு தெரியாது. அதனூடாக இது தொடர்பில் விசாரணை முன்னெடுத்து அதுதொடர்பிலான விடயங்களின் சரி, தவறை உறுதிப்படுத்தி அதனூடான உரிய நடவடிக்கை எடுப்பது ஆணைக்குழுவின் முக்கிய உரிமை என்பதுடன் கடமையுமாகும்-என்றுள்ளது.

(அ)

# கரடியனாறில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூர் தயாரிப்புத் துப்பாக்கி ஒன்று மீட்பு!

மட்டக்களப்பு, மே. 30

கரடியனாறு பிரதேசத்தில் உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கி ஒன்றை மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன் தினம் இரவு 8.00 மணியளவில் மீட்டுள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் அவசர சேவையான 119 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு வந்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவ தினமான நேற்று முன் தினம் இரவு கரடியனாறு தும்பாஞ்சோலை பிரதேசத்தில் குறித்த பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூர் தயாரிப்பான துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# கிராண்ட்பாஸ் பகுதியில் ஒருவர் அடித்துக் கொலை

கொழும்பு, மே. 30

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் நபர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தனது வீட்டுக்கு அருகில் ஓட்டோவை நிறுத்தி களியாட்டங்களில் ஈடுபட்ட சிலருடன் இடம்பெற்ற வாக்குவாதம் தீவிரமடைந்த நிலையில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் கொழும்பு - 15 ஹேனமுல்ல முகாம் பகுதியைச் சேர்ந்த 65 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மின்சாரம், எரிபொருள்...

திட்டத்தின் ஆரம்ப கட்ட முன்நடவடிக்கைகளில் ஒன்றான, செலவை ஈடு செய்யும் மின்சாரம் மற்றும் எரிபொருள் விலை நிர்ணயத்தை மீண்டும் நிறுவுவதற்கு அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது.

எரிபொருள் மானியங்கள் உள்ளிட்ட ஏனைய நிவாரண நடவடிக்கைகள் 100 பில்லியன் ரூபாய் எல்லைக்கு உட்பட்டதாக அமையும் என்பதுடன், அவை செப்ரெம்பர் மாத இறுதிக்குள் செலுத்தி முடிக்கப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ், நாட்டின் பொருளாதாரச் சீர்திருத்த செயல்முறைகளைத் தொடர்ச்சியாக முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு அரசாங்கம் முழுமையாக அர்ப்பணிப்புடன் உள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் பின்வரும் முக்கிய கட்டமைப்புச் சீர்திருத்தங்களை நோக்கமாகக் கொண்டுள்ளதாக அக்கடிதத்தில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது:-

வருவாயை அடிப்படையாகக் கொண்ட நிதி ஸ்திரத்தன்மை.

வலுவான சமூக பாதுகாப்பு வலையமைப்பை நடைமுறைப்படுத்துதல்.

நிதித்துறையின் சீர்திருத்தங்கள் மற்றும் செலவை ஈடுசெய்யும் ஆற்றல் விலை நிர்ணயம்.

அரசாங்கக் கடன் நிலைத்தன்மை மற்றும் விலை ஸ்திரத்தன்மையைப் பேணுதல்.

மாற்று விகிதங்களில் அதிக நெகிழ்வுத்தன்மையுடன் வெளிநாட்டு கையிருப்பை கட்டியெழுப்புதல்.

நிதித்துறையின் ஸ்திரத்தன்மை மற்றும் ஊழல் அபாயங்களைத் தடுப்பதற்கான உயர்மட்ட கட்டமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல். (அ)

## காணாமற்போன மீனவர்களை...

நிலையில் அவர்களை தேடும் பணிகளை துரிதமாக்க பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன் இரவு சுமார் 11 மணியளவில் இரண்டு படகுகளில் கடலுக்குச் சென்ற குறித்த மீனவர்கள் இதுவரை கரைக்கு திரும்பவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலை தொடர்பாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து, அமைச்சர் உடனடியாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பிரதி பணிப்பாளர் நாயகத்திடம் தொடர்பு கொண்டு தேடுதல் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு அவசர பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், நேற்று அதிகாலை விமானப்படையின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேலும், நவீன தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்தியும் கடற்பரப்பில் விரிவான தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், அண்டை நாடுகளின் கடற் பாதுகாப்பு பிரிவுகளுக்கும் காணாமல் போன மீனவர்கள் தொடர்பான தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், சர்வதேச மட்டத்திலும் தேடுதல் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றன.

காணாமல் போன மீனவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட வேண்டும் என கடற்படையினருக்கும், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் அமைச்சர் வேண்டுக்கோள் விடுத்துள்ளார். (அ)

## காணாமலாக்கப்பட்டோரின்...

எதிர்பார்க்கப்பட்டுள்ளது என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

சமகால அரசியல் மற்றும் பொது விடயங்கள் தொடர்பில் தனியார் ஊடகம் ஒன்றில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது-

நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சிக்கு வந்துள்ளோம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முழுமையான ஆதரவளித்துள்ளார்கள். வடக்குக்கு சென்றால் தமிழ் மக்கள் ஜனாதிபதியை அன்புடன் வரவேற்கிறார்கள். கடந்த காலங்களில் இவ்வாறான தன்மை காணப்படவில்லை.
ஜனாதிபதியும் மக்களோடு மக்களாகவே செயற்படுகிறார்.

தமிழ் மக்கள் இனவாதத்தை முன்னிலைப்படுத்தி செயற்படவில்லை. இந்த நாட்டில் இனி ஒருபோதும் இனவாத முரண்பாடுகள் தோற்றம் பெறாது என்பதற்கு உறுதியளிக்கிறோம். இனவாத முரண்பாடுகளினால்தான் இந்த நாடு பாரிய பின்னடைவை எதிர்கொண்டது-என்றார். (அ)

## காலத்தை இழுத்தடிக்காமல்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மயிலிட்டிப் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காணி விடுவிப்பு கோரி நடைபெற்ற கறுப்புக்கொடி ஏந்திய போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தம் காரணமாக 36 வருடங்களுக்கு முன்னர் வலி. வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள், யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும் சொந்த மண்ணில் மீள் குடியேற அனுமதிக்கப்படவில்லை.

தற்போதும் அந்த மக்கள் தமது உறவினர்கள் நண்பர்கள் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் தங்கி வாழ்கின்றனர்.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் மக்களின் காணிகளை விடுவிப்போம் என கூறி ஆட்சிக்கு வந்த அநுர அரசாங்கம் இரண்டு வருடங்கள் கடந்தும் இன்னமும் காணிகள் விடுவிக்கப்படவில்லை

மக்களின் காணிகளில் இராணுவத்தினர் விவசாயப் பண்ணைகளை நடத்தி வருகின்றனர். தோட்டங்களில் விவசாயம் செய்து மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த காணிகள் பாதுகாப்பு காரணங்களுக்காக கையகப்படுத்தப்படவில்லை.

17 வருடங்களாக யுத்தங்கள் இல்லாதபோதிலும் மக்கள் இன்னமும் தெருக்களில் வாழ்கின்றார். இந்த அரசாங்கமும், முன்னைய அராஜக அரசாங்கம் போன்றே செயற்படுகின்றது.

மக்களின் கோரிக்கைகள் நியாயமானது. சர்வதேச அமைப்புக்கள், மனித உரிமை செயற்பாட்டளர்கள் என இங்கே நேரில் வந்து இந்த காணிகளை பார்வையிட்டால் தெரியும். இங்கு இராணுவ முகாம்களுக்காக காணிகளைக் கையகப்படுத்தப்படவில்லை. இந்த மக்கள் தமது சொந்த காணிகளில் விவசாயம் செய்து அவர்கள் தமது வாழ்வாதாரத்தை தேடிக்கொள்ள வேண்டும். ஆனால் இங்கு தனியார் காணிகளில் இராணுவ வைத்தியசாலை கட்டப்பட்டுள்ளது. தனியார் காணிகளில் இராணுவம் விவசாயம் செய்கிறது. இந்த காணிகளை உடன டியாக விடுவியுங்கள்

எதிர்வரும் ஜூன் மாதம் 19ஆம் திகதி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ள ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், விடுவிக்கப்பட வேண்டிய காணிகளையும், இன்னமும் மீள்குடியேற்றப்படவுள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்பில் விவரங்களையும் சமர்ப்பிக்குமாறு கோரியுள்ளோம். அதன் அடிப்படையில் மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டிய தொடர் அழுத்தங்களை கொடுக்கவுள்ளோம்-என்றார். (அ)

## காணாமற்போன படகுகளில்...

வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாகவும் ஆழ்கடல் சுழியோடிகள் சகிதம் முடுக்கிவிடப்பட்டன.

பருத்தித்துறை - முனை மற்றும் கற்கோவளம் பகுதிகளில் இருந்து கடந்த புதன்கிழமை இரவு இரண்டு படகுகளில் கடலுக்குச் சென்ற பருத்தித்துறை முனை கடற்றொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த கதிர்காமம் சோதிலிங்கம் (வயது 52), சுமியோம்பிள்ளை சுஜிக்குமார் (வயது 37) மற்றும் கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த பாலச்சந்திரமூர்த்தி இராமகிருஸ்ணன் (வயது 54), அவரது மகனான இராமகிருஸ்ணன் ரவிராஜ் ஆகிய நான்கு மீனவர்களுமே இவ்வாறு காணாமல்போயுள்ளனர்.

நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரு பகுதிகளில் இருந்தும் 10 படகுகளில் சென்ற உள்ளூர் மீனவர்கள் ஆழ்கடல் பகுதியில் தீவிர தேடுதலில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது, ஒரு படகு வலைகளுடன் கடலில் மூழ்கிய நிலையில் இருப்பதை மீனவர்கள் நேரில் கண்டறிந்துள்ளனர். அத்துடன், கடலில் மிதந்த ஒரு பகுதி வலைகள் மற்றும் சில மீன்பிடி உபகரணங்களை மீட்டு நேற்று முன் தினம் மாலை கரைக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இந்நிலையில், படகு மூழ்கியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து, நேற்று வெள்ளிக்கிழமை காலை முனை மற்றும் கற்கோவளம் பகுதிகளில் இருந்து 24 விசைப்படகுகளில் ஆழ்கடல் சுழியோடிகள் (சுழியோடி மீனவர்கள்) சகிதம் பெருமளவிலான மீனவர்கள், படகு மூழ்கிய இடத்தை நோக்கி விரைந்துள்ளனர்.

மூழ்கிய படகுக்குள் மீனவர்கள் சிக்கியிருக்கலாம் என்ற பலத்த சந்தேகத்தின் அடிப்படையில், சுழியோடிகளின் உதவியுடன் கடலுக்கு அடியில் இறங்கித் தேடும் மீட்பு நடவடிக்கைகள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டன.

மீனவர்கள் காணாமல்போனது முதல் பருத்தித்துறை முன்னாள் நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் சம்பவ இடத்திலேயே முகாமிட்டு, கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உரிய தரப்பினருடன் தொலைபேசி மூலமாகத் தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றார். மேலும், தேடுதல் பணிகளுக்காகக் கடலுக்குச் செல்லும் 24 படகுகளுக்குத் தேவையான எரிபொருள் விநியோகம் உள்ளிட்ட அத்தியாவசிய உதவிகளையும் அவர் முன்னின்று வழங்கி வருகின்றார்.

இதேவேளை, மீனவர்கள் காணாமல்போய் 24 மணித்தியாலங்களுக்கும் மேலாகக் கடந்துள்ள நிலையிலும், அதிநவீன வசதிகளைக் கொண்ட இலங்கை கடற்படையினரோ அல்லது கடற்றொழில் அமைச்சரோ இதுவரை எவ்வித உத்தியோகபூர்வ மீட்பு நடவடிக்கைகளையும் எடுக்காமை குறித்துப் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரும் சக மீனவர்களும் தங்களின் கடுமையான அதிருப்தியையும் கவலையையும் வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று நிலைமைகளைக் கேட்டறிந்து, அநர்த்த முகாமைத்துவப் பிரிவினருக்கு அழுத்தம் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடலில் மூழ்கிய படகை மீட்கவும், மீனவர்களின் நிலையை அறியவும் வடமராட்சி மக்கள் சோகத்துடன் கடற்கரையில் காத்திருக்கின்றனர். (அ)

## சிறுவருக்கு எதிரான...

மத்திய பஸ் நிலையம் முன்பாக இடம்பெற்றது.

“சிறுவர்களின் பாதுகாப்பு அனைவரினதும் கூட்டுப் பொறுப்பு” என்ற கோஷத்துடன் இடம்பெற்ற போராட்டத்தில், சமூக செயற்பாட்டாளர்கள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர்கள் மற்றும் மக்கள் பங்கேற்று, சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினர்.

சிறுவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்க, அரசு மற்றும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர். (அ)

## போக்குவரத்து அமைச்சின்...

இருந்து விலகுவது குறித்து பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக அவருக்கு எதிராக உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள பின்னணியில், அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, செயலாளர் பதவியில் இருந்து விலகிய பின்னர், பேராசிரியர் கபில பெரேரா மீண்டும் பல்கலைக்கழக சேவையில் இணைவதற்கு தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## வடக்கு மக்களின்...

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது இலங்கையில் நான்கு வகையான தேர்தல்கள் நடைமுறையில் உள்ளன. நாட்டின் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத்துக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான பொதுத் தேர்தல், அதன் பின்னர் மாகாண சபைகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான மாகாண சபைத் தேர்தல், அதேபோன்று, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்.

இந்த நான்கு தேர்தல்களும் இருப்பதன் மூலம் இலங்கையில் முறையான மேலாண்மையுடன் கூடிய அரசாங்கம் மற்றும் நிர்வாகத்தை சிறப்பாக நடத்திச் சென்று, மக்களின் இறையாண்மையை முன்னோக்கிக் கொண்டு செல்வதாகும். எனவே, மக்கள் தேர்தல் எதுவாக இருந்தாலும், தங்களது வாக்குரிமையைப் பயன்படுத்தி, தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இதுதான் இறையாண்மை அதிகாரம் மக்களுக்கு இருக்கும் ஒரே அதிகாரம். இந்த அமைப்பிற்குள், குறைபாடுகள் இருக்கலாம். அந்த குறைபாடுகளை சரிசெய்து கொண்டு நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். தற்போதைய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்து கணிசமான காலம் ஆகிறது. அவர்கள் கொண்டுவந்த சட்டங்கள் என்ன? சிஸ்டம் சேஞ்ச் நடந்ததா? எப்போது வேண்டுமானாலும் இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்ட இந்த அரசாங்கத்துக்கு இந்த அமைப்பை மாற்ற முடியும்-என்றார். (அ)

## பஸில் உள்ளிட்டோரை...

திணைக்களத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு ஊவா மாகாண சபை தேர்தல் பிரசாரத்துக்காக, சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்துக்குச் சொந்தமான 7.8 மில்லியன் ரூபாய் பொது நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில், பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டோரை இந்த வழக்கில் சந்தேக நபர்களாகப் பெயரிடுவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று நீதிமன்றத்தில் மனுவொன்றின் ஊடாக அறிவித்தது.

இதனைத் தொடர்ந்தே, சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான உத்தரவை நீதவான் பிறப்பித்தார். எனினும், இவர்களைக் கைது செய்வதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இவர்களது வீடுகளுக்குச் சென்றபோது, சந்தேகநபர்கள் எவரும் அங்கு இல்லை என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதைத் தடுக்கும் வகையில் அவர்களுக்கு வெளிநாட்டு பயணத்தடையை விதிக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்கள விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதவான், பயணத்தடை உத்தரவைப் பிறப்பித்ததுடன், அது குறித்து குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உடனடியாக அறிவிக்குமாறும் உத்தரவிட்டார்.

கடந்த 2014 ஆம் ஆண்டு சுற்றுலா ஊக்குவிப்பு நடவடிக்கை எனக் கூறி, அரச நிதியில் 12,000 ரி-சேர்ட்கள் அச்சிடப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்கள நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

அந்த ரி-சேர்ட்களின் ஒரு பக்கத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புகைப்படமும், மறுபக்கத்தில் அரசியல் கட்சியொன்றின் பெயரும் அச்சிடப்பட்டு, மொனராகலை மாவட்டத்தில் நடைபெற்ற அரசியல் பொதுக்கூட்டம் மற்றும் பிரசாரங்களின்போது அவை விநியோகிக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (அ)

## மயிலிட்டியில் இருந்து...

வெசாக் கால பகுதியில் அப்பகுதி முழுவதும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# பிணையாளரிடம் நேரடியாகக் கடன் தொகையை மீட்க வங்கிக்கு உரிமை!

## உயர் நீதிமன்றம் முக்கிய தீர்ப்பு

கொழும்பு, மே. 30

முதன்மைக் கடனாளிக்கு எதிராக முதலில் சட்ட நடவடிக்கை எடுக்காமல், பிணையாளருக்கு எதிராக கடன் வழங்கிய நிறுவனம், நேரடியாக வழக்கு தொடர சட்டபூர்வ உரிமை உண்டு என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனினும், இதற்கான நிபந்தனையாக பிணைய ஒப்பந்தத்தில் பிணையாளர் தனது அந்த உரிமையை வெளிப்படையாக விட்டுக்கொடுத்திருக்கவேண்டும் என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

வங்கி ஒன்றிடம் கடன் வசதிகளைப் பெற்ற நிறுவனம் ஒன்றின் பிணையாளரான விதானகே ஹப்பாவன என்பவரை பொறுப்பாக்கிய வணிக மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்து, உயர்நீதிமன்றம் இந்த மேன்முறையீட்டுத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

குறிப்பிட்ட நிறுவனத்தின் கடன் வசதிகளுக்காகப் பிணையாக இருந்த பிரதிவாதியிடமிருந்து வட்டியுடன் சேர்த்து 5.5 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான தொகையை மீட்டெடுப்பதற்காக வங்கி இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தது.

எனினும் இதற்குப் பதிலளித்த பிரதிவாதி, கடனைப் பெற்ற மற்றும் அதன் முழுப் பலனையும் அனுபவித்த நிறுவனம் தான் முதன்மைக் கடனாளி என்பதால், இந்த வழக்கில் அந்த நிறுவனத்தையும் ஒரு தரப்பாகச் சேர்த்திருக்கவேண்டும் என்றும், தனக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு முன் அந்த நிறுவனத்துக்கு எதிராகவே முதலில் வழக்குத் தொடர்ந்திருக்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

இந்தநிலையில்,ரோம - டச்சு சட்டத்தின் கீழ், பொதுவாக ஒரு பிணையாளர் முதன்மைக் கடனாளிக்கு எதிராக முதலில் வழக்குத் தொடர வேண்டும் என்று வற்புறுத்த உரிமை உண்டு என்றாலும், அத்தகைய உரிமையை ஒப்பந்தத்தின் மூலம் வெளிப்படையாகத் துறக்க முடியும் என்று உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த வழக்கைத் தீர்த்து வைத்து தீர்ப்பளித்த நீதியரசர் சம்பத் விஜேரத்ன, பிணைய ஒப்பந்தத்தின் 15ஆவது பிரிவின்படி, முதன்மைக் கடனாளிக்கு எதிராக முதலில் நடவடிக்கை எடுக்காமல், நேரடியாகப் பிணையாளருக்கு எதிராகத் தொடர வங்கிக்குத் தெளிவான அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், பிணைய ஆவணங்களின் உள்ளடக்கங்கள் தனக்குத் தெரியாது என்றும், வெற்றுத் தாள்களிலேயே தான் கையெழுத்திட்டதாகவும் பிரதிவாதி முன்வைத்த வாதத்தை உயர் நீதிமன்றம் நிராகரித்தது.

கையெழுத்திட்ட நபர் எழுதப் படிக்கத் தெரியாதவராகவோ, பார்வையற்றவராகவோ அல்லது பரிவர்த்தனையின் தன்மையைப் புரிந்துகொள்ள முடியாதவராகவோ இருந்தால் ஒழிய, இத்தகைய வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

இதன்படி, வணிக மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்த உயர் நீதிமன்றம், இரண்டு நீதிமன்றங்களினதும் வழக்குச் செலவுகளைப் பெற்றுக்கொள்ள மனுதாரரான வங்கிக்கு உரிமை உண்டு என்றும் தெரிவித்துள்ளது.

நீதியரசர்களான யசந்த கோதாகொட, ஷிரான் குணரத்ன மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகிய மூவர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மேல்முறையீட்டு மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (அ)

# 515 பட்டதாரி தாதியர்களுக்கு நேற்று நியமனக் கடிதங்கள்!

கொழும்பு, மே. 30

கடந்த ஐந்து வருடங்களில் முதன்முறையாக, 515 பட்டதாரி தாதியர்களுக்கு நேற்று உத்தியோகபூர்வமாக நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த புதிய நியமனங்கள் அனைத்தும் தரம் 111 தாதிய உத்தியோகத்தர் பதவிகளுக்காக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. நாட்டில் கடந்த 2021ஆம் ஆண்டுக்குப் பின்னர் பட்டதாரி தாதியர்களுக்கான நியமனங்கள் எதுவும் வழங்கப்படாதிருந்த நிலையில், நீண்ட இடைவெளியின் பின்னரே இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு புதிதாக நியமனம் பெறும் பட்டதாரி தாதியர்கள் அனைவரும், நாடு தழுவிய ரீதியில் உள்ள முக்கிய அரசாங்க மருத்துவமனைகள் மற்றும் போதனா மருத்துவமனைகளில் உடனடியாக பணிகளில் அமர்த்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தற்போதைய நிலவரப்படி இலங்கையின் பொதுச் சுகாதாரத் துறையில் மொத்தம் 43,553 தாதிய உத்தியோகத்தர்கள் சேவையாற்றி வருவதாக சுகாதார அமைச்சு மேலும் உறுதிப்படுத்தியுள்ளது. (அ)

# சிறுவர்கள், பெண்கள் துஷ்பிரயோகம் கண்டித்து மன்னாரில் நேற்று பேரணி!

மன்னார், மே. 30

நாடளாவிய ரீதியில் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிராக, அதிகாரம் மிக்க சமய தலைவர்களால் நடைபெறும் பாலியல் ரீதியான அநீதிகள் அதிகரித்து வரும் நிலையில், அதற்கு எதிராக கண்டனத்தையும் நீதிக்கான கோரிக்கையையும் வெளிப்படுத்தும் வகையில், மன்னாரில் நேற்று கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்த கண்டனப் போராட்டம் நேற்று காலை மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்த கண்டனப் போராட்டத்தில் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், மெசிடோ நிறுவன பிரதிநிதிகள், சமூக செயல்பாட்டாளர்கள் கலந்து கொண்டதோடு, புத்தளம் மாவட்ட முஸ்லிம் பெண்கள் அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளரும் கலந்து கொண்டார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். மாவட்ட செயலகத்துக்கு முன் ஆரம்பமான கண்டனப் பேரணி மன்னார் பஜார் பகுதியூடாக சென்று மீண்டும் மன்னார் மாவட்ட செயலக பகுதியை வந்தடைந்தது.

# பெண் ஊழியர்களுக்கு சம்பளத்துடன் மாதவிடாய் விடுமுறை அவசியமானது

## அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்க குடும்பத் திட்டமிடல் சங்கம் தீர்மானம்

கொழும்பு, மே. 30

பெண்களுக்குச் சம்பளத்துடனான மாதவிடாய் விடுமுறையை வழங்குவது குறித்து பரிசீலிக்குமாறு அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுக்கவுள்ளதாக இலங்கை குடும்ப திட்டமிடல் சங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச மாதவிடாய் சுகாதார தினத்தை முன்னிட்டு, தற்காலத்துக்கு அவசியமானதொரு முற்போக்கான நகர்வாக இக்கோரிக்கையை முன்வைக்கவுள்ளதாக அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. இலங்கையில் பெண் ஊழியர்களுக்குச் சம்பளத்துடனான மாதவிடாய் விடுமுறையை அங்கீகரித்த முதலாவது நிறுவ னம் இலங்கை குடும்ப திட்டமிடல் சங்கம் என்பது குறிப்பி டத்தக்கது.

இது குறித்து குடும்பத் திட்டமிடல் சங்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மருத்துவர் ருசித பெரேரா தெரிவிக்கையில்-

எமது சங்கத்தின் பெண் ஊழியர்களுக்குச் சம்பளத்துடனான மாதவிடாய் விடுமுறையை வழங்கும் நடைமுறையை கடந்த ஆண்டே நாம் உத்தியோகபூர்வமாக்கியுள்ளோம்.

இந்நிலையில், அரச நிறுவனங்களில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கும் இந்த விடுமுறையை அனுமதிப்பது குறித்து பரிசீலிக்குமாறு கோரி, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, தொழில் அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரிகளுக்கு நாம் கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கவுள்ளோம்-என்றார். (அ)

# மகிந்த, மைத்திரிபால ஆகியோருக்கு முறைகேடான வழிகளில் அரச காணி!

## தேசிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மே.30

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் உத்தியோகபூர்வ நிலக் கொள்கைகளை மீறி, முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு முறைகேடான வழிகளில் அரச காணிகள் வழங்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுதத் பலகல்ல பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

பொதுவாக வீடமைப்பு அதிகார சபையின் நிலக் கொள்கையின் படி, நாட்டில் வாழும் குறைந்த வருமானம் பெறும் ஏழைக் குடும்பம் ஒன்றுக்கு ஒரு காணி மாத்திரமே வழங்க முடியும் என்ற கடுமையான சட்ட விதிமுறை நடைமுறையில் உள்ளது.

ஆனால், கடந்த 1999 ஆம் ஆண்டில் அப்போதைய அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஒரு ஏக்கர் அரச நிலம் தாராளமாக வழங்கப்பட்டுள்ளது எனச் சுதத் பலகல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

“அவர் ஒன்றும் காணி இல்லாத, குறைந்த வருமானம் பெறும் ஏழை என்று நான் நினைக்கவில்லை” என அவர் சபையில் சாடியுள்ளார்.

அதேபோன்று, மகிந்தவின் மனைவிக்கும் அவர்களின் ஆட்சிக் காலத்தில், பல கோடி ரூபாய் நட்டத்தை ஏற்படுத்தி “கார்டன் மொண்டிசோரி“ என்று கூறப்படும் இடத்துக்கு மற்றொரு பெறுமதி மிக்க அரச நிலம் வழங்கப்பட்டுள்ளது என்றும், அந்த நிலத்துக்கு மேலதிகமாக, அதனைச் சுற்றியிருந்த பொதுமக்களுக்குச் சொந்தமான மேலும் சில பகுதிகளும் அவர்களால் அத்துமீறிப் பலாத்காரமாகக் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சுதத் பலகல்ல மேலும் குற்றம் சுமத்தியுள்ளார். (அ)



# அரசியல் ரீதியான தோல்விக்கு பயந்தே தேர்தலை நடத்த பயப்படுகின்றது அரசு!

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, மே. 30

அரசாங்கம் நிதியியல் நெருக்கடிகளைக் காரணம் காட்டி, மாகாண சபை தேர்தல்களைத் தொடர்ந்து தாமதப்படுத்தி வருவதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், தேர்தல் தோல்விக்கு அஞ்சியே அரசாங்கம் தேர்தலை நடத்தாமல் தவிர்க்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே தயாசிறி ஜயசேகர இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன், தற்போதுள்ள மாகாண சபை கட்டமைப்புக்குப் பதிலாக புதியதொரு முறையை அறிமுகப்படுத்துவதாக ஆரம்பத்தில் உறுதியளித்திருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், அது குறித்துப் பேசி ஒன்றரை வருடங்களுக்கும் மேல் கடந்துள்ள நிலையிலும், இதுவரை எந்தவொரு தெளிவான பொறிமுறையும் அறிமுகப்படுத்தப்படவில்லை என அவர் சாடினார்.

இந்தநிலையில், தேர்தலை நடத்துவதற்கு நிதி பற்றாக்குறை நிலவுவதாக அண்மையில் ரில்வின் சில்வா குறிப்பிட்டிருந்த கருத்துக்கள் குறித்துக் கேள்வி எழுப்பிய தயாசிறி ஜயசேகர, தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுவதற்கு ஒரு அரசியல் கட்சியின் பொதுச்செயலாளருக்கு என்ன அதிகாரம் உள்ளது என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களாட்சியைப் பாதுகாப்பதும், தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்படுவதை உறுதி செய்வதுமே அரசியல் தலைவர்களின் பொறுப்பாக இருக்கவேண்டுமே தவிர, தேர்தல்களைத் தாமதப்படுத்துவது அல்ல என்றும் அவர் கூறினார்.

அத்துடன், அரசாங்கத்தின் மீது இன்னும் மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது என அவர்கள் உண்மையாகவே கருதினால், தமக்கான மக்கள் ஆதரவைச் சோதித்து பார்க்க முன்வரவேண்டும் என தயாசிறி ஜயசேகர சவால் விடுத்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media